குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.18/2022

ம.சா. 2

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 30–ம் தேதி புதன் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோதை | தொழில் | |
| கணவர் பெயர் | சுதர்வாணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.30 மணி,

Complainant Sadhasivam present. Advocate Mr.Karunakaran present for Complainant. Accused Venkatramani present. Advocate Mr.Rajaguru present for Accused.

**முதல் விசாரணை :**

(1) நான் ஸ்டேட் பேங்க் வங்கி, மோகன்நகர் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். ஜீலை 01 2025 தேதி முதல் பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணம் எங்களுடைய வங்கி கிளையின் காசோலை என்றால் சரிதான். ஆஜர் எதிரி எங்களுடைய கிளையில் எத்தனை ஆண்டுகளாக வங்கி கணக்கை பராமரித்து வருகிறார் என்றால் சரியாக தெரியவில்லை. மேற்படி ஆஜர் எதிரியின் வங்கி கணக்கு சம்பந்தமாக ஏதேனும் ஆவணங்கள் எடுத்து வந்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் இருந்து எனக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பானையில் எந்த ஆவணங்களும் குறிப்பிடவில்லை என்பதால் எடுத்து வரவில்லை.

மனுதாரர் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.37 மணி.

Sd/.S.Sadhamhusain,
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.